**ஜூன் – 30**

# TNPSC துளிகள்


- கர்நாடக இசைக் கலைஞர் மற்றும் வயலின் கலைஞர் ஜோதி கலைக்கு நாத பிரம்மம் யுனைடெட் கியான் அகாடமியானது நாத வினோதினி என்ற பட்டத்தை வழங்கியது.
- பிராண்ட் ஃபைனான்ஸ் இந்தியா நிறுவனத்தின் முன்னணி 100 நிறுவனங்கள் என்ற ஒரு அறிக்கையின் படி, டாடா குழுமம் ஆனது 30 பில்லியன் டாலர் என்ற நிறுவன மதிப்பைக் கடந்து, இந்தியாவின் மிகவும் மதிப்பு மிக்க நிறுவனமாக மாறியது.
- இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் "The One: Cricket, My Life and More" என்ற தலைப்பில் தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.
- குஜராத்தில் உள்ள அகமதாபாத், காந்திநகர் மற்றும் ஏக்தா நகர் ஆகிய இடங்களில் 2029 ஆம் ஆண்டு மதிப்புமிக்க உலக காவல் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்த உள்ளது.
- இந்தியாவின் சுபன்ஷு சுக்லா விண்வெளிக்குச் சென்ற 634வது விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெற்று, மற்ற இந்தியர்களான ராகேஷ் சர்மா (138வது) மற்றும் கல்பனா சாவ்லா (366வது) ஆகியோர் அடங்கியப் பட்டியலில் இணைந்தார்.
- கத்தாரில் உள்ள அல் உதெய்த் அமெரிக்க விமானப் படை தளத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உலகளாவிய எண்ணெய் விலைகள் ஒரே நாளில் (6%) மிக மோசமான சரிவை கண்டன.
- சீனாவில் வௌவால் மூலம் பரவும் 20 புதிய வைரஸ்களை அறிவியலாளர்கள் கண்டு அறிந்துள்ளனர், அவற்றில் இரண்டு கொடிய நிபா மற்றும் ஹென்ட்ரா வைரஸ்களுடன் தொடர்புடையவையாகும்.
- ஹெலன் கெல்லர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 27 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையினால் முதலாவது சர்வதேச காது கேட்கும் திறனற்றோர் மற்றும் பார்வைத் திறனற்றோர் தினம் அனுசரிக்கப்பட்டது.
- சர்வதேச சேறு/மண் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 29 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- நம் வாழ்வில் சமூக ஊடகங்களின் மிகப்பெரும் முக்கியத்துவத்தை அங்கீகரித்து ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 30 ஆம் தேதியன்று சமூக ஊடக தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச அன்னாசிப் பழ தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 27 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- கேரள மாநில வனவிலங்கு வாரியமானது கண்ணூரில் உள்ள ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தை ஆரளம் வண்ணத்துப்பூச்சி சரணாலயம் என்று மறுபெயரிட்டுள்ளது.
  - இதன் மூலம், இது இந்தியாவில் மிக முழுமையாக வண்ணத்துப் பூச்சிகளுக்கென ஏற்படுத்தப் பட்ட முதல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## 24 பதிவுசெய்யப்பட்ட, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள்

- தமிழ்நாட்டில் குறைந்தது 24 அரசியல் கட்சிகள் 'பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப் படாத அரசியல் கட்சிகள்' என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- அவற்றிற்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் காரணம் கேட்பு அறிக்கை அனுப்பப் படுவதற்கான வாய்ப்புள்ளது.
- கடந்த ஆறு ஆண்டுகளில் இவை ஒரு தேர்தலில் கூட போட்டியிடவில்லை.
- அரசியல் கட்சிகள் அனைத்தும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 29Aவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.
- இவ்வாறு பதிவு செய்வதன் மூலம், அவற்றிற்கு வருமான வரிச் சட்டத்தின் 13Aவது பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு, சின்னங்கள் குறித்த உத்தரவின் 6வது பத்தியின் கீழ் அங்கீகாரம், பொதுவான சின்னம் ஒதுக்கீடு மற்றும் நட்சத்திரப் பிரச்சாரகர்களை பரிந்துரைத்தல் போன்ற பல சலுகைகள் கிடைக்கின்றன.
- இந்தச் சட்டத்தின் 29Aவது பிரிவின் கீழ் ஒரு சங்கத்தை அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்வதன் நோக்கம், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் அந்தப் பகுதியின் பயன்களைப் பெறுவதாகும்.
- அதாவது ஆணையத்தால் நடத்தப்படும் தேர்தல்களில் பங்கேற்பதைக் குறிக்கிறது.





# தேசியச் செய்திகள்

## மொழி மேம்பாட்டு நிதியின் நிலை

- 2014–15 மற்றும் 2024–25 ஆகிய சில ஆண்டுகளுக்கு இடையில், சமஸ்கிருத மொழியை மேம்படுத்துவதற்காக மத்திய அரசானது 2,532.59 கோடி ரூபாயைச் செலவிட்டது.
- தமிழ் மொழி உட்பட மற்ற ஐந்து செம்மொழிகளின் மேம்பாட்டிற்காக மொத்தம் 147.56 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது.
- தமிழுக்கு மட்டும் 113.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- சமஸ்கிருதத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் கன்னடம் மற்றும் தெலுங்கு ஆகியன தலா 0.5 சதவீதத்திற்கு குறைவாகவும், ஒடியா மற்றும் மலையாளம் ஆகியவை தலா 0.2 சதவீதத்திற்குக் குறைவாகவும் நிதி பெற்றுள்ளன.
- 2008 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய மீதமுள்ள இதர நான்கு செம்மொழிகளுக்கான ஒருங்கிணைந்த நிதி ஒதுக்கீடு 34.08 கோடி ரூபாய் ஆகும்.
- 2014-15 மற்றும் 2024-25 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தி, உருது மற்றும் சிந்தி மொழிகளுக்கான ஒருங்கிணைந்த நிதி ஒதுக்கீடு 1,317.96 ரூபாய் ஆகும்.

- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 1.2 பில்லியனில் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஒடியா மற்றும் கன்னட மொழி பேசுபவர்கள் 21.99% பேர் ஆக உள்ளனர்.




## இந்தியாவின் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான புதிய எண்ணிம நடவடிக்கை

- இந்தியாவின் கடல்சார் துறையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசானது, புதிய எண்ணிமத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது.
- அந்த முக்கியத் திட்டங்களில்,
  - SAGAR SETU-சாகர் சேது - துறைமுகங்களின் வளர்ச்சி மற்றும் அணுகலுக்கான ஒரு தடையற்ற நிர்வாகம் – திறம் மிக்கப் போக்குவரத்து மற்றும் வர்த்தக ஒருங்கிணைப்புக்கான அமைப்பு,
  - சிறப்பு எண்ணிம மையம் (DCoE),
  - DRISHTI கட்டமைப்பு மற்றும்
  - கட்டணங்களின் தகவல் குறித்த ஆவணம் (SOR) ஆகியவை அடங்கும்.
- இந்த முன்னெடுப்புகள் ஆனது துறைமுகங்களை நவீனமயமாக்குவதையும், கப்பல் போக்குவரத்தை மிகவும் திறம் மிக்கதாகவும் நிலையானதாகவும் மாற்றுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளன.
- திறன் மிகு வகையிலான மற்றும் பசுமை சார் துறைமுகச் செயல்பாடுகளை உருவாக்குவதற்காக DCoE ஆனது செயற்கை நுண்ணறிவு (AI), இணைய உலகம் (IoT) மற்றும் தொடர் சங்கிலித் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.
- வேகமான, நேரடி ஆவணங்களற்ற/காகிதமற்ற ஏற்றுமதி-இறக்குமதி (EXIM) செயல் முறைகளுக்காக SAGAR SETU 80க்கும் மேற்பட்ட துறைமுகங்களையும் 40 பங்குதாரர் நபர்களையும் இணைக்கிறது.
- DRISHTI ஆனது 2030 ஆம் ஆண்டு கடல்சார் இந்தியா தொலைநோக்குத் திட்டங்களின் முன்னேற்றத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்கிறது.
- SOR ஆவணங்கள் என்பது வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிக்கவும் துறைமுகக் கட்டணங்களைத் தரப் படுத்துகிறது.

- அனைத்து முன்னெடுப்புகளும் 2030 ஆம் ஆண்டு கடல்சார் இந்தியா தொலைநோக்குத் திட்டம் மற்றும் 2047 ஆம் ஆண்டில் அம்ரித காலம் ஆகியவற்றின் இலக்குகளுடன் ஒத்துப் போகின்றன.




## செயலற்ற அரசியல் கட்சிகள் 2025





- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, சுமார் 345 செயலற்றப் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப் படாத அரசியல் கட்சிகளை (RUPPs) பட்டியலில் இருந்து நீக்குவதற்கான செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- இந்தக் கட்சிகள் ஆனது, 2019 ஆம் ஆண்டு முதல் எந்தத் தேர்தலிலும் போட்டியிட வில்லை.
- சரி பார்ப்பின் போது அவற்றின் அலுவலகங்கள் நேரடியாக அமைந்திருக்கக் கூடியது.
- இந்தியாவில் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 29A பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட 2,800க்கும் மேற்பட்ட RUPP கட்சிகள் உள்ளன.
- இந்தக் கட்சிகளில் பல கட்சிகள் வரிச் சலுகைகளை கொண்டிருந்தாலும், தேர்தலில் போட்டியிடுவதற்கான அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை.
- தலைமைத் தேர்தல் அதிகாரிகள் (CEO) இந்தக் கட்சிகளுக்குக் ஒரு காரணம் கேட்பு

அறிக்கையினை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

- இக்கட்சிகள் தங்கள் சூழலை மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் CEO அதிகாரிகள் முன் விளக்கலாம், ஆனால் ECI ஆனது இறுதிப் பட்டியல் நீக்க முடிவை எடுக்கும்.

## அலுவல் மொழித் துறையின் 50 ஆம் ஆண்டு நிறைவு




- அலுவல் மொழித் துறையானது அதன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது என்ற நிலையில் இது நிர்வாகத்தில் இந்திய மொழிகளின் பயன்பாட்டினை மேம்படுத்தச் செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.
- 1975 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான செயல்பாடுகள் ஆனது, மொழியியல் அதிகாரமளிப்புக்கான கூட்டு அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டினைப் பிரதிபலிக்கிறது.
- ஏக் பாரத் ஸ்ரேஷ்தா பாரத் போன்ற முன்னெடுப்புகள் கலாச்சாரப் பரிமாற்றம் மூலம் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன.
- காசி-தமிழ், காசி-தெலுங்கு மற்றும் சௌராஷ்டிரா-தமிழ் சங்கமம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் மொழிகளை நெருக்கமாக ஒருங்கிணைக்கின்றன.
- பாஷா சங்கத்தின் கீழ், பள்ளிகள் தற்போது 22 பட்டியலிடப்பட்ட மொழிகளில் மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சுமார் 100 சொற்றொடர்களை மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன.

## முதல் கடல்சார் NBFC


- கடல்சார் துறைக்கான நாட்டின் முதல் பிரத்தியேக NBFC சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இதற்கு சாகர்மாலா நிதி நிறுவனம் லிமிடெட் (SMFCL) என்று பெயரிடப்பட்டது.
- இது முன்னர் சாகர்மாலா மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது.
- SMFCL தற்போது இந்திய ரிசர்வ் வங்கியில், வங்கி அல்லாத நிதி நிறுவனமாக (NBFC) அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கு மினி ரத்னா, முதல் வகை, மத்தியப் பொதுத்துறை நிறுவன அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது.

- SMFCL என்பது துறைமுக மேம்பாடு, கப்பல் போக்குவரத்து மற்றும் பிற கடல்சார் திட்டங்களுக்கு நிதியளிக்க உதவும்.




## சர்வதேசச் செய்திகள்

### GAVI கூட்டணியில் இருந்து வெளியேறும் அமெரிக்கா




- தடுப்பூசிகள் மற்றும் நோய்த் தடுப்புக்கான உலகளாவிய கூட்டணியில் (GAVI) இருந்து தனது ஆதரவை அமெரிக்கா விலக்கிக் கொள்கிறது.
- GAVI என்பது WHO, UNICEF, கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் உலக வங்கி உள்ளிட்ட ஒரு பொது-தனியார் கூட்டாண்மை ஆகும்.
- வழக்கமான நோய்த்தடுப்பு திட்டங்கள் மூலம் சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு இது நிதி வழங்கி, சுமார் 18 மில்லியன் உயிர்களைக் காப்பாற்றியுள்ளது.
- இது உலக சுகாதார அமைப்பின் தடுப்பூசி பாதுகாப்பு வலையமைப்பு (VSN) என்ற

திட்டத்திலும் உறுப்பினராக உள்ளது.

- அமெரிக்கா ஏற்கனவே WHO அமைப்பு, பாரிஸ் பருவநிலை உடன்படிக்கை, UN மனித உரிமைகள் சபை, UN நிவாரணம் மற்றும் பணிகள் முகமை (UNRWA) போன்ற பல மைப்புகளிலிருந்தும் விலகியுள்ளது.

## ஏழ்மை நிலையில் உள்ள 50 நாடுகள் 2025

- தெற்கு சூடான் நாடானது, 251 டாலர் என்ற மதிப்பிலான தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உலகின் மிக ஏழ்மையான நாடாக உள்ளது.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட நாடுகள் உலகின் ஏழ்மையான நாடுகளில் அடங்கும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4வது பெரிய நாடான இந்தியா, 2025 ஆம் ஆண்டில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகளவில் 50வது இடத்தில் உள்ளது (2,878 டாலர்).
- இதில் ஆப்கானிஸ்தான், எரித்திரியா, லெபனான், பாகிஸ்தான், இலங்கை, சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றுக்கான தரவுகள் கிடைக்கப் பெறவில்லை.

| Rank | Country | GDP per Capita (USD) |
|---|---|---|
| 1 | South Sudan | $251 |
| 2 | Yemen | $417 |
| 3 | Burundi | $490 |
| 4 | Central African Republic | $532 |
| 5 | Malawi | $580 |
| 6 | Madagascar | $595 |
| 7 | Sudan | $625 |
| 8 | Mozambique | $663 |
| 9 | Democratic Republic of the Congo | $743 |
| 10 | Niger | $751 |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டீப் மைண்ட் நிறுவனத்தின் ஆல்பாஜீனோம்





- டீப் மைண்ட் நிறுவனமானது, ஆல்பாஜீனோம் என்ற ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு கருவியை உருவாக்கியுள்ளது.
- ஒரு டிஎன்ஏ எழுத்தை மாற்றுவது ஒரு மரபணு வெளிப்பாட்டை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆல்பாஜீனோம் கணித்துள்ளது.
- மாற்றங்கள் ஆனது ஆர்என்ஏ மற்றும் புரதப் பொருட்களை எவ்வாறு பாதிக்கின்றன

என்பதைக் காட்டுகிறது.

- மற்ற செயற்கை நுண்ணறிவுகள் மரபணுவின் சுமார் 2% (புரதக் குறியீட்டுப் பாகங்கள்) மட்டுமே பகுப்பாய்வு செய்கின்றன.
- ஒரு முழு மனித மரபணுவையும் பகுப்பாய்வு செய்த முதல் செயற்கை நுண்ணறிவு ஆல்பாஜீனோம் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நிலையான மின்கல மறுசுழற்சி செயல்முறை




- BatX எனர்ஜிஸ் நிறுவனமானது, லித்தியம்-அயனி மின்கல வேதியியலுக்குப் புறம்பான ஒரு பிரத்தியேக குறைந்த வெப்பநிலை, குறைந்த அழுத்த நீர்ப்பகுப்பு உலோகவியல் செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, லித்தியம்-அயனி மின்கலங்களுக்கான உள்நாட்டு மின்கல மறு சுழற்சி செயல்முறையை வணிகமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒரு செயல்முறையானது, பயன்படுத்தப்பட்ட சில மின்கலங்களிலிருந்து மின்கல உற்பத்தித் தர லித்தியம், கோபால்ட், நிக்கல் மற்றும் மாங்கனீஸ் ஆகியவற்றினை மீட்டெடுக்கிறது.
- அவர்களின் தொழில்நுட்பம் என்பது அனைத்து வகையான லித்தியம்-அயனி மின் கல வேதியியல்களுடனும் செயல்படுகிறது.
- இந்தச் செயல்முறையானது ஈரப் பதமான மற்றும் உலர்ந்த black mass எனப்படும் ஒரு செயல் முறையின் எஞ்சியப் பொருட்களின் மீட்பு மூலம் 97–99% மீட்பு விகிதங்களை அடைகிறது.
- இது சேகரிப்பு, துண்டாக்குதல், உலோகக் கசிவு மற்றும் சுத்திகரிப்பு என ஒரு முழு சுழற்சியையும் உள்ளடக்கியது.
- காப்புரிமை பெற்ற இந்தத் தொழில்நுட்பம் ஆனது மிக முழுமையாக இந்தியாவில் உருவாக்கப் பட்டது என்பதால் இது இறக்குமதி செய்யப்பட்ட சில உபகரணங்களின் தேவையைக் குறைக்கிறது.

## ICCON 2025 சந்திப்பு

- 2025 ஆம் ஆண்டு இந்திய வளங்காப்பு மாநாடு (ICCON) ஆனது, டேராடூனில் உள்ள

இந்திய வனவிலங்கு நிறுவனத்தில் (WII) நடைபெற்று வருகிறது.

- ICCON ஆனது, இந்தியாவின் அவசர வனவிலங்கு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் சார்ந்த சவால்களைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த மாநாடு ஆனது 2023 ஆம் ஆண்டில் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு விழா மற்றும் சர்வதேசப் பெரும் பூனை இனங்கள் கூட்டணி (IBCA) தொடங்கப் பட்ட போது தொடங்கியது.




## கப்படகுடா வனவிலங்கு சரணாலயம்




- கர்நாடகாவில் உள்ள கப்படகுடா வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றி மத்திய அரசு சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலத்தினை (ESZ) அறிவித்துள்ளது.
- அதன் ஒரு தனித்துவமான பல்லுயிர்ப் பெருக்கத்தின் காரணமாக இது பெரும்பாலும் "வடக்கு கர்நாடகாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகள்" என்று குறிப்பிடப்படுகிறது.
- இந்தச் சரணாலயத்தில் சுமார் 400 வகையான மருத்துவ தாவரங்கள் உள்ளது மற்றும் பல்வேறு வகையான காய்ந்த புதர்கள் மற்றும் இலையுதிர் தாவரங்களைக் கொண்டு உள்ளது.

- அதன் சுற்றுச்சூழல் மதிப்பைத் தவிர, இந்த மலைகளில் ஆங்காங்கே காணப்படும் பல பழங்கால கோயில்களின் இடிபாடுகள் அதன் கலாச்சாரப் பாரம்பரியத்தை நன்கு பிரதிபலிக்கின்றதுடன் கப்படகுடா சரணாலயம் ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

## பல்லுயிர்ப் பெருக்கத் தரவு நிதி 2024

- 2024 ஆம் ஆண்டில், IBAT ஆனது பல்லுயிர்ப் பெருக்கத் தரவுகளில் இதுவரை இல்லாத அளவில் 2.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை (USD) முதலீடு செய்துள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட 1.2 மில்லியன் அமெரிக்க டாலர்களில் (USD) இருந்து அதிகரிப்பைக் குறிக்கிறது.
- ஒருங்கிணைந்தப் பல்லுயிர்ப் பெருக்க மதிப்பீட்டுச் செயல் முறைமை (IBAT) கூட்டணி ஆனது 2008 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது நான்கு முக்கிய உலகளாவிய வளங்காப்பு அமைப்புகளின் கூட்டமைப்பாகும்.
- அதன் உறுப்பினர் அமைப்புகளாவன பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல், கன்சர்வேஷன் இன்டர்நேஷனல், IUCN மற்றும் UNEP உலக வளங்காப்பு கண்காணிப்பு மையம் (UNEP-WCMC) ஆகியனவாகும்.
- இந்தக் கூட்டணியின் தலைமையகம் ஐக்கியப் பேரரசின் கேம்பிரிட்ஜ் என்னுமிடத்தில் உள்ளது.




## இந்தியாவின் முதல் உள்நாட்டு மீன்வளம்




- இந்தியாவிலேயே முதன்முறையாக, சிலிக்கா ஏரியில் கழி/சேற்று நண்டு பிடித்தலுக்கு

உலகளாவிய ஒரு நிலைத் தன்மை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

- ❖ சிலிக்காவின் கழி நண்டு பிடித்தலுக்கு என கடல்சார் மேற்பார்வையாளர் சபை (MSC) சான்றிதழைப் பெறுவதற்கான கூட்டு முன்னெடுப்பு தொடங்கியுள்ளது.
- ❖ இந்த மீன்வளமானது, வடகிழக்கு இந்தியாவில் பொருளாதார ரீதியாகவும் சுற்றுச் சூழல் ரீதியாகவும் முக்கியமானதாகும்.
- ❖ இது MSC சான்றிதழுக்குப் பரிசீலிக்கப்படும் இந்தியாவின் முதல் உள்நாட்டு மீன் வளம் ஆகும்.
- ❖ MSC என்பது ஒரு நிலையான மீன் பிடித்தலை ஊக்குவித்து, சான்றளிக்கும் ஒரு முக்கிய உலகளாவியத் திட்டமாகும்.
- ❖ சிலிக்கா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரியக் கடலோரக் காயலாகும் என்பதோடு மேலும் யுனெஸ்கோ அமைப்பினால் அங்கீகரிக்கப் பட்ட பல்லுயிர்ப் பெருக்க மையம் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## EAGLE - தெலங்கானா


- ❖ தெலங்கானா மாநில அரசானது தெலங்கானா போதைப்பொருள் எதிர்ப்பு வாரியத்தினை (TGANB) EAGLE எனப் படும் சிறப்பு அமலாக்கப் பிரிவாகத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ EAGLE என்பது போதைப் பொருள் சட்ட அமலாக்கத்திற்கான மேம்பட்ட நடவடிக்கைக் குழு (Elite Action Group for Drug Law Enforcement) என்பதைக் குறிக்கிறது.
- ❖ இது தெலங்கானாவில் கஞ்சா சாகுபடியைக் கண்டறிந்து அழித்தல் மற்றும் மாநில எல்லைகளில் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்ளும்.

## தேர்தல் பட்டியல்களின் சிறப்புத் தீவிரத் திருத்தம் – பீகார்

- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, பீகாரில் வாக்காளர் பட்டியல்களின் ஒரு

முனைப்பான சிறப்பு திருத்தம் (SIR) ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.

- வீடு வீடாகச் சென்று சரி பார்ப்பு, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள் (BLO) மூலம் இது மேற்கொள்ளப்படும்.
- தகுதியுள்ள அனைத்துக் குடிமக்களையும் சேர்த்து, தகுதியற்ற அல்லது போலியான உள்ளீடுகளை அகற்றுவதே இதன் நோக்கமாகும்.
- பீகாரில் கடைசியாக முனைப்பான ஒரு திருத்தம் ஆனது 2003 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- இந்தத் திருத்தமானது நகரமயமாக்கல், புலம் பெயர்வு மற்றும் பதிவு செய்யப்படாத உயிரிழப்புகள் போன்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது.
- 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 326 மற்றும் 16வது பிரிவுகளின் கீழ் கடுமையான சட்ட விதிகள் பின்பற்றப்படும்.
- வாக்காளர் சரிபார்ப்புக்குப் பயன்படுத்தப் படும் ஆவணங்கள் ஆனது அங்கீகரிக்கப் பட்ட அதிகாரிகளுக்கு மட்டுமே தெரியப் படுத்தும் வகையில் ECINET தளத்தில் இது பாதுகாப்பாக பதிவேற்றப் படும்.




## போனலு விழா 2025

- போனலு என்பது தெலுங்கானாவில், குறிப்பாக ஐதராபாத் மற்றும் செகந்திராபாத்தில் கொண்டாடப்படும் ஓர் இந்து பண்டிகையாகும்.
- தெலுங்கு மொழியில் "விருந்து" எனப் பொருள்படும் "போனலு" என்ற வார்த்தை ஆனது தெய்வத்திற்காக தயாரிக்கப்படும் சிறப்பு உணவைக் குறிக்கிறது.
- இங்கு பக்தர்கள் மகாகாளி தேவிக்கு என்று அரிசி, வெல்லம், தயிர் மற்றும் வேப்பிலை ஆகியவற்றின் கலவையான போனம் என்ற உணவைப் படையலாக வழங்குகிறார்கள்.

- ஆசீர்வாதம் மற்றும் நோய்கள் & பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக இந்தப் பிரசாதம் வழங்கப்படுகிறது.
- 19 ஆம் நூற்றாண்டின் பிளேக் தொற்று உட்பட கடந்த கால துயர சம்பவங்களின் போது மக்களைப் பாதுகாத்ததற்காக அத்தெய்வத்திற்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக இது கொண்டாடப்படுகிறது.




### ஜகன்னாத் ரத யாத்திரை 2025




- ஜகன்னாத் ரத யாத்திரை என்பது ஒடிசாவில் கொண்டாடப் படும் பிரபலமான இந்துப் பண்டிகையாகும்.
- இது தேர் விழா அல்லது ஸ்ரீ கண்டிச்சா யாத்திரை என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்த விழாவானது நிலவின் ஒரு பிரகாசமானக் கட்டத்தின் (சுக்ல பகசம்) இரண்டாவது நாளான த்விதியா திதியில் நடைபெறுகிறது.

## முக்கிய தினங்கள்

### சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினம் 2025 - ஜூன் 26

- 1987 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கை

நடைமுறைக்கு வந்தது.

- தற்போது, இந்த உடன்படிக்கையில் 174 நாடுகள் பங்கு தாரராக உள்ளன.
- 2002 ஆம் ஆண்டில், சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கைக்கான நாடுகளின் ஒரு விருப்பத் தேர்வு சார்ந்த கூடுதல் நெறிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Torture: a crime against humanity" என்பது ஆகும்.




## உலக குளிர்பதன தினம் 2025 - ஜூன் 26

- அன்றாட வாழ்வில் குளிர்பதன தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும், குளிர்பதன மற்றும் காற்றுப் பதனத் துறையின் ஒரு முக்கியத்துவத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1824 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று பிறந்த கெல்வின் பிரபுவின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Cool Skills" என்பதாகும்.




## ஹெலன் கெல்லர் தினம் 2025 - ஜூன் 27

- இந்த நாள் என்பது அனைத்துத் தனிநபர்களுக்கும் அவர்களின் திறன்களைப் பொருட் படுத்தாமல், உள்ளடக்கம், அணுகல் மற்றும் சம வாய்ப்புகள் வழங்குதலின் பெரும் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது.
- இந்த நாள் ஹெலன் கெல்லரின் பிறந்த நாளை நினைவு கூரும் நாள் ஆகும்.

- இங்கு ஹெலன் கெல்லர் கேட்கும் திறனற்றவராகவும் பார்வைத் திறனற்றவராகவும் பிறந்தாலும், அவர் ஒரு சிறந்த எழுத்தாளராகி ஏராளமான புத்தகங்களை வெளியிடச் செய்தார்.
- அவர் "பார்வைத் திறனற்றோருக்கான அமெரிக்க அறக்கட்டளையை" நிறுவினார்.
- கெல்லரின் சுயசரிதை The Story of My Life (1903) என்ற பெயரில் வெளியானது.




## MSME தினம் 2025 - ஜூன் 27


- ஐக்கிய நாடுகள் சபையானது 2017 ஆம் ஆண்டில் இந்த நாளை நியமித்தது.
- உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாட்டினை முன்னெடுப்பதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் (MSME) முக்கியப் பங்கை எடுத்துக் காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Enhancing the role of MSMEs as drivers of Sustainable Growth and Innovation” என்பதாகும்.




## தேசியப் புள்ளியியல் தினம் 2025 - ஜூன் 29

- இத்தினமானது இந்தியப் புள்ளியியலின் தந்தை என அறியப்படும் P.S. மகலனோபிஸ் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.

- மகலனோபிஸ் 1931 ஆம் ஆண்டு இந்தியப் புள்ளியியல் நிறுவனம் நிறுவப்படச் செய்வதற்கான அடித்தளத்தினை அமைத்தார்.
- இத்தினமானது, முதன்முதலில் இந்தியாவில் 2007 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, '75 Years of National Sample Survey' என்பது ஆகும்.




## சர்வதேச வெப்பமண்டல தினம் 2025 - ஜூன் 29





- வெப்பமண்டலப் பகுதிகள் கொண்டுள்ள மகத்தான பன்முகத்தன்மை மற்றும் அதன் உலகளாவிய ஒரு எதிர்காலத்தை வடிவமைப்பதில் அவை வகிக்கும் முக்கியப் பங்கை இந்த நாள் அங்கீகரிக்கிறது.

- 2014 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், முதல் 'வெப்பமண்டலப் பகுதிகளின் நிலை குறித்த அறிக்கை' வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின் இரண்டாவது பதிப்பு ஆனது 2020 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.
- வெப்ப மண்டலப் பகுதி என்பது கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையிலான பகுதியைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'The future belongs to the Tropics' என்பதாகும்.

## உலக குறுங்கோள் தினம் 2025 - ஜூன் 30

- இது குறுங்கோள்களின் மோதல்கள் பூமியில் உள்ள உயிர்களில் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் 1908 ஆம் ஆண்டில் நடைபெற்ற துங்குஸ்கா நிகழ்வை நினைவு கூருகிறது.
- இந்த மிகப்பெரிய குறுங்கோள் மோதலால் 2,000 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவிலான சைபீரியக் காடுகள் அழிவுற்றன.




## சர்வதேசப் பாராளுமன்ற தினம் 2025 - ஜூன் 30




- இந்த நாள் 1889 ஆம் ஆண்டு பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் (IPU) நிறுவப் பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- தற்போது, இந்த அமைப்பானது 181 தேசிய மற்றும் 15 பிராந்தியப் பாராளுமன்றங்களை ஒன்றிணைக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Achieving gender equality, action by action' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★